## October 11, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நிகழாண்டு அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலாவின் எதிர்க்கட்சியான வென்டே வெனிசுலாவின் தலைவர் மரியா கொரினா மச்சா டோவுக்கு (58) அறிவிக்கப்பட்டுள்ளது.
   i. உலக நாடுகளில் ஒப்பீட்டளவில் மக்களாட்சி நாடாக வெனிசுலா வளமாக இருந்தது. தற்போது அது எதேச்சதிகார நாடாக மனிதத்தன்மைக்கு எதிரான நெருக்கடியாலும், பொருளாதார சிக்கலாலும் பாதிக்கப்பட்டுள்ளது.
   ii. அந்நாட்டில் நியாயமாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடை பெற வேண்டும் என்று 20 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் குரல் எழுப்பத் தொடங்கினார். நாட்டு மக்களின் சுதந்திரத் துக்காக அவர் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்துள்ளார்.
2. ஜப்பானில் லிபரல் ஜனநாயகக் கட்சியின் (எல்டிபி) தலைமையிலான ஆளும் கட்சிக் கூட்டணியில் 26 ஆண்டுகளாக அங்கம் வகித்த கொமேய்டோ கட்சி, அதில் இருந்து விலகுவதாக அறிவித்தது.
   i. இதையடுத்து, எல்டிபிகட்சித் தலைவராக கடந்த வாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் அமைச்சரான சனே தகாய்ச்சி (64) நாட்டின் முதல் பெண் பிரதமராகப் பொறுப்பேற்பதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.
   ii. இது குறித்து கொமேய்டோ கட்சியின் தலைவர் டெட்சுவோ சாய்டோ கூறுகையில், எஸ்டிபி கட்சி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் கவலையளிப்பதால் கூட்டணியில் இருந்து விலகுவதாகத் தெரிவித்தார்.
   iii. இந்த முடிவு வருத்தமளிப்பதாகக் கூறிய தகாய்ச்சி, இது சாய்டோவின் ஒருதலைப்பட்சமான முடிவு என்று சாடியுள்ளார்.
   iv. ஏற்கெனவே ஆளும் கூட்டணிக்கு நாடாளுமன்ற இரு அவைகளிலும் பெரும்பான்மை இல்லாத நிலை உள்ளது. இந்தச் சூழலில் கூட்டணியில் இருந்து கொமேய்டோ கட்சி விலகியுள்ளது. இருந்தாலும், பிற எம்.பி.க்களின் ஆதரவுடன் சனே தகாய்ச்சி பிரதமராவதற்கு இன்னும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.
3. பாகிஸ்தானுக்கு 'எய்ம்-120' போன்ற வானிலிருந்து நடுத்தர தொலைவு வான் இலக்குகளைத் தாக்கும் (ஆம்ராம்) தங்களது புதிய மேம்பட்ட ஏவுகணைகள் வழங்கப்பட விருப்பதாக வெளியான செய்திகளை அமெரிக்கா மறுத்துள்ளது.
4. உலக அளவில் மனநலப் பிரச்னைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், இது தொடர்பான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில், உலக சுகாதார அமைப்பு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 10-ஆம் தேதி உலக மனநல தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
   i. கடந்த 1992-இல் இருந்து இத்தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 'சேவைகளுக்கான அணுகல்-பேரழிவு மற்றும் அவசர காலங்களின்போது மனநலம்' என்பதே நடப்பாண்டுக்கான கருப்பொருளாகும்.
5. மலைப் பகுதிகளில் இயக்கப்படும் விடியல் பயணத் திட்ட பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் கட்டணமின்றி பயணிக்க தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
   i. தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படும் விடியல் பயணத்திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளிலும் இயக்கப்படும் பேருந்துகளில், கட்டணமில்லா பயணத் திட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என ஆக.15- இல் நடைபெற்ற சுதந்திர தின உரையில் முதல்வர் அறிவித்திருந்தார்.
6. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (எஸ் பிஐ) உள்பட 12 பொதுத் துறை வங்கிகளில் உயர் பதவிகளுக்கு தனியார் துறையைச் சேர்ந்தவர்களை நியமனம் செய்யும் மத்திய

அரசின் நடவடிக்கைக்கு வங்கி ஊழியர் சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

i. இது தேசிய நிறுவனங்களின் தலைவர் பதவிகளை தனியார்மயமாக்கும் செயல் என்றும், இதை உடனடியாக மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் வங்கி ஊழி யர் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.
ii. பொதுத் துறை வங்கிகளில் தலைமை இயக்குநர் (எம்.டி.), தலைவர், செயல் இயக்குநர் பதவிகளுக்கு இதுவ ரையில் அந்தந்த வங்கிகளில் உள்ளவர்களைக் கொண்டே நிரப்பப்பட்டு வந்தன.
iii. இந்நிலையில், பொதுத் துறை வங்கிகள், காப்பீடு நிறு வனங்களின் உயர் பதவி பணி நியமன விதிமுறை திருத்தங் களுக்கு அண்மையில் பணி நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. அதன்படி, தனி யார் துறையைச் சேர்ந்த ஒருவருக்கு எஸ்பிஐ-யில் எம்.டி., பஞ்சாப் தேசிய வங்கி, பாங்க் ஆஃப் பரோடா, கனரா வங்கி, யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, பாங்க் ஆஃப் இந்தியா ஆகிய பொதுத் துறை வங்கிகளில் தலா ஒரு செயல் தலைவர் பதவிக்கு தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

7. பிலிப்பின்ஸின் தெற்கு கடல் பகுதியில் ஏற்பட்ட இரு சக்திவாய்ந்த நிலநடுக்கங்களில் 7 பேர் உயிரிழந்தனர்.
   i. ரிக்டர் அளவுகோலில் 7.4 அலகுகளாகப் பதிவான முதல் நிலநடுக்கத்தில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. மருத்துவமனைகள், கட்டடங்கள் சேதமடைந்தன. கடற்கரை பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் திரும்பப் பெறப்பட்டது.
   ii. புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும் 'பசிபிக் நெருப்பு வளையம்' என்றழைக்கப்படும் பகுதிக்குள் பிலிப்பின்ஸ் அமைந்துள்ளதால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.
8. நாடு முழுவதும் பல்வேறு சிறைகளில் அடைக்கப் பட்டுள்ள 4.5 லட்சம் விசாரணைக் கைதிகளுக்கு வாக்குரிமை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீது பதிலளிக்க மத்திய அரசு மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
   i. பஞ்சாப் மாநிலம் பாட்டியாலா வைச் சேர்ந்த சுனிதா சர்மா என்பவர் தாக்கல் செய்த பொது நல மனு மீது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி கே.வி னோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணை நடத்தியது.
   ii. அந்த மனுவில் கூறப்பட்டிருப் பதாவது: ஊழல் மற்றும் தேர்தல் தொடர்புடைய குற்றங்களில் சிறையில் அடைக்கப்பட்டவர்களைத் தவிர்த்து நாடு முழுவதும் பல்வேறு வழக்குகள் தொடர்பாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 4.5 லட்சம் விசாரணைக் கைதிகள் மற்றும் குற்றம் உறுதி செய்யப்படாத கைதிகள் வாக்களிக்க மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 பிரிவு 62 (5) தடை விதிக்கிறது.
   iii. இந்தச் சட்டம் பேரவை உறுப்பினர்களின் வாக்குரிமை மற்றும் தகுதிநீக்கம் பற்றியே குறிப்பிடுகிறது. இதில் தகுதிவாய்ந்த குடிமக்களின் வாக்குரிமையை பறிக்க முடியாது.
   iv. சிறைகளில் உள்ள 75 சதவீத கைதிகள் விசாரணைக் கைதிகளாகவே உள்ளனர். அவர்கள் மீது தொடுக் கப்பட்ட வழக்கு முழுவதுமாக நிறை வடையும் முன் வாழ்வின் பெரும்ப குதியை சிறையிலேயே கழிக்க வேண்டியநிலையும் ஏற்படுகிறது. விசாரணைக் கைதிகள் மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்படும் முன் அவர்களது வாக்குரிமையை பறிப்பது

ஜனநாயகமற்ற செயல். குடியுரிமை அல்லாதோர், குற்றம் அல்லது ஊழல் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் போன்றவர்கள் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

- v. கடந்த 2016-இல் 'எந்தவொரு வாக்காளரும் விடுபடக்கூடாது என தேர்தல் ஆணையம் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டது. எனவே, சிறையில் உள்ள விசாரணைக் கைதிகளுக்கு வாக்குரிமை வழங்குவது குறித்து மத்திய அரசும் தேர்தல் ஆணையமும் உடனடியாக முடிவெடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.
- vi. இதை கவனத்தில்கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு இது தொடர்பாக மத்திய அரசும் தேர்தல் ஆணையமும் பதிலளிக்க உத்தரவிட்டது.

9. இராக்கின் குர்து பிராந்தியத்தில் உள்ள சுலைமானியா விமான நிலையத்தில் விமானங்கள் வருவதற்கு கடந்த 2023 முதல் விதிக்கப்பட்டிருந்த தடையை துருக்கி நீக்கியது.
    - i. துருக்கி அதிபர் எர்டோகனை நேரில் சந்தித்துப் பேசிய பிறகு, இராக் குர்து பிராந்திய தலைவர் நெச்சிர்வான் பர்சானி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
    - ii. துருக்கியில் குர்து மாகாணத்துக்கு கூடுதல் அதிகாரம் கேட்டு போராடி வந்த குர்திஸ்தான் மக்கள் கட்சி (பிகேகே) சுலைமானியா விமான நிலையத்தைத் தவறாகப் பயன்படுத்தும் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த நிலையத்துக்கு துருக்கி தடை விதித்திருந்தது. ஆனால், ஆயுதங்களைக் கைவிட்டு இயக்கத்தைக் கலைக்க பிகேகே முடிவு செய்துள்ள நிலையில், அந்தத் தடை தற்போது விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

10. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-
    - i. வினய் - எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்ற 2025 பாரா பவர்லிஃப்டிங் உலக சாம்பியன்ஷிப்பில் ஆண்கள் 72 கிலோ ஜூனியர் பிரிவில் தங்கம் வென்றார்.
    - ii. அரினா சபலென்கா - பெலாரஸ் டென்னிஸ் வீராங்கனை.